க.பொ.த. (உயர் தரம்)

# வணிகக்கல்வி I

Channel NIE

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

**வணிகக்கல்வி I** நேரம் 03 மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்கள்

சுட்டெண் :..................................

- சகல வினாக்களுக்கும் இவ்வினாப் பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும்.
- சுட்டெண்ணை உரிய கூட்டினுள் தெளிவாக எழுதவும்.
- வினா இலக்கம் 01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வினாவின் முன்னாலுள்ள கோட்டின் மீது எழுதவும்.
- வினா இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குரிய சுருக்கமான விடையினை உரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- சகல வினாக்களுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

01 இலத்திரனியல் வணிகம் பிரபல்யமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் கீழே தரப்படுகின்றன. அவற்றுள் ஒன்று பிழையானது. அதனைத் தெரிவு செய்க.
1 செயற்பாட்டுக் கிரயமும் இருப்புக் கிரயமும் குறைவடைதல்.
2 பொருட்களை பௌதீக ரீதியாக பரிசீலித்து கொள்வனவு செய்யும் ஆற்றல் அதிகரிக்கும்.
3 பூகோள ரீதியான சந்தை வாய்ப்புகள் உருவாதல்.
4 கணினி அறிவு அதிகரித்தல்.
5 கொடுக்கல் வாங்கல் செயல்முறைகளை வேகமாக மேற்கொள்ள முடிதல். (..........)

02 வணிகங்கள் தொடர்பில் அக்கறை காட்டும் பிரிவினர்களில் சிலர் கீழே தரப்பட்டுள்ளனர்.
A. உரிமையாளர் B. கடன் கொடுநர் C. ஊழியர் D. நுகர்வோர்
E. வழங்குநர் F. பல்வேறு முதலீட்டாளர்கள் G. அரசு H. பொதுமக்கள்
I. முகாமையாளர்
மேலே குறிப்பிட்ட தரப்பினருள் அகச் சூழல் காரணிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதியினை தெரிவு செய்க.

1) A,B,C 2) A,D,I 3) B,D,H 4) F,G,H 5) A,C,I (..........)

03 நிலைபேறான அபிவிருத்தியை மிகச் சிறப்பாக விளக்கும் கூற்றை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
1 நாட்டின் மெய்த்தேசிய உற்பத்தி தொடர்ச்சியாக விருத்தியடைவதுடன் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்.
2 வேலையின்மை, வருமான வேறுபாடு, வறுமை என்பன சமூகத்திலிருந்து விலகுவதன் காரணமாக உருவாகின்ற நிலமையாகும்.
3 எதிர்காலச் சந்ததியினருக்கு அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு காணப்படுகின்ற உரிமையினை மீறாமல் சமகாலத்தில் தேவைகளை பூர்த்தி செய்வதினூடாக அபிவிருத்தியினைப் பெற்றுக்கொள்ளல்.

4 இயற்கைச் சூழலை அழிக்காமல் வினைத்திறனான மாற்றங்களை செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலச் சந்ததியினருக்காக பூகோளச் சூழலைப் பாதுகாத்துக் கொள்ளல்.

5 தற்கால மக்களின் தேவைகளை நிறைவு செய்வதினூடாக மானிட அபிவிருத்தியினை ஏற்படுத்துதலும் எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளை மீறாமல் மேற்கொள்வதற்கு வழிகளை ஏற்படுத்திக் கொள்ளல். (..........)

04 நாடொன்றில் நிதிக்கொள்கையினை நடைமுறைப்படுத்தும் போது பயன்படுத்துகின்ற கருவிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. வட்டி வீதம்

B. சட்டபூர்வ ஒதுக்கு வீதம்

C. பொருளாதாரமொன்றில் கடன் பாய்ந்து செல்லும் திசையினைக் கட்டுப்படுத்துதல்.

D. சிறந்த ஊக்குவிப்பு எனப்படுகின்ற தார்மீகத் தூண்டுதல்

E. திறந்த சந்தை நடவடிக்கைகள்

மேலே கருவிகளில் சரியாக வகைப்படுத்தப்பட்டுள்ள விடையினை தெரிவு செய்க

| | பண்புசார் | அளவுசார் |
|---|---|---|
| 1) | A,B,C | D,E |
| 2) | D,E | A,B,C |
| 3) | A,D | B,C,E |
| 4) | C,D,E | A,B |
| 5) | C,D | A,B,E |

(..........)

05 தனியார் துறையிலும் அரச துறையிலும் காணக்கூடிய வணிக அமைப்பு வகையாக அமைவது.

1 கூட்டுறவு

2 கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

3 தனியுரிமை வணிகம்

4 திணைக்களம்

5 பங்குடமை வணிகம் (..........)

06 பின்வரும் முயற்சியாண்மை பண்புகளில் முயற்சியாண்மை திறன்களும் உள்ளடங்கியுள்ளது. முயற்சியாண்மைப் பண்பாக அமைவது.

1 தலைமைத்துவத்தை ஏற்று நடக்கக் கூடியதாக இருத்தல்

2 சுயாதீனமான தன்மை

3 தன்னம்பிக்கை காணப்படல்.

4 ஆக்கபூர்வமான தன்மை (புத்தாக்கம்)

5 அர்ப்பணிப்பு மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படல். (..........)

07 சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற பண்பு ரீதியான நியதிகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியினைத் தெரிவு செய்க.

1 ஊழியர் எண்ணிக்கை, முகாமைத்துவ நுட்ப முறைகள், வெளியீட்டின் தன்மை, பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம்

2 முதலிடப்பட்ட மூலதனம், வருடாந்த விற்பனைப் புரள்வு, உற்பத்தி இயலளவு, ஊழியர் எண்ணிக்கை

3 வணிகக் கருமங்களின் தன்மை, பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம், முகாமைத்துவ நுட்ப முறைகள்

4 மின் சக்தியின் இயலளவு, வெளியீட்டின் தன்மை, சந்தையின் தன்மை, முதலிடப்பட்ட மூலதனம்

5 உற்பத்தி இயலளவு, ஊழியர் எண்ணிக்கை, பயன்படுத்துகின்ற தொழில்நுட்பம், ஊழியரை நெருக்கமாக மேற்பார்வை செய்தல். (..........)

08 வணிகமொன்று மேற்கொண்டுள்ள காப்புறுதியும் அக்காப்புறுதியுடன் தொடர்புபட்ட விடயமும் கீழே தரப்பட்டுள்ளன.

| **காப்புறுதி** | **காப்புறுதியுடன் தொடர்பு பட்ட விடயம்** |
|---|---|
| i) வழிச்சரக்குக் காப்புறுதி | A. உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள் |
| ii) தீயபாயக் காப்புறுதி | B. மோட்டார் வான் |
| iii) ஊழியர் பொறுப்புக் காப்புறுதி | C. கொண்டு செல்லப்படுகின்ற பொருட்கள் |
| iv) உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி | D. ஊழியர்கள் |

காப்புறுதியினை அதனுடன் தொடர்பு பட்ட விடயத்தையும் பொருந்துகின்ற போது சரியாக வருகின்ற விடைத் தொகுதி எது?

1 1-C, 2-B, 3-D, 4-A
2 1-C, 2-D, 3-B, 4-A
3 1-D, 2-C, 3-A, 4-B
4 1-B, 2-D, 3-C, 4-A
5 1-A, 2-C, 3-D, 4-B (..........)

09 இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள் மற்றும் கருமங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. பொருளாதார மற்றும் விலை மட்டங்களின் உறுதியினைப் பேணல்.
B. பணக் கொள்கையினை நெறிப்படுத்துதல்.
C. நிதிக் கொள்கையில் உறுதித் தன்மையினை ஏற்படுத்துதல்.
D. சட்டப் பணத்தினை வெளியிடல்
E. அரசின் நிதி மற்றும் பொருளாதார ஆலோசகராக கடமையாற்றுதல்.

மேலே தரப்பட்டவற்றுள் மத்திய வங்கியின் பிரதானமான நோக்கங்களாக அமைவது.

1 A யும் E யுமாகும்
2 B யும் D யுமாகும்
3 C யும் E யுமாகும்
4 A யும் C யுமாகும்
5 D யும் E யுமாகும் (..........)

10 தொழிற்பயிற்சி அதிகார சபையினூடாக உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கணினிப் பயிற்சிப் பாடநெறி தொடர்பில் அறிவூட்டுவதற்கு தொலைக்காட்சி ஊடகத்தைப் பயன்படுத்தி அறிவித்தலொன்றைத் தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய பிரதானமான விடயமாக அமைவது.

1 இழிவு (குறைந்த) கிரயம்
2 மொழியினை சரியாக பயன்படுத்துதல்
3 குரல் அசைவினை உரியவாறு மேற்கொள்ளுதல்
4 சமூக கலாச்சாரம்
5 ஒழுக்க நெறிமுறைகளைக் கொண்டிருத்தல் (..........)

11 பியல் திருகோணமலையிலிருந்து கொழும்பிற்கு மீன்களை கொண்டு சென்று விற்பனை செய்கின்ற வணிகராவார். அதற்குப் பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றைத் தெரிவு செய்யும் போது பொருத்தமற்ற விடயம் எது?

1 கிரயம்
2 தூரத்தின் அளவு
3 பொருளின் தன்மை
4 வலு
5 நேரம் (..........)

12 உற்பத்திப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் மீளவும் அதனைப் பெற்றுக் கொள்ளல் என்பன ஒரே பக்கத்தில் இடம்பெறக்கூடியவாறு அல்லது உற்பத்திப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல் ஒரு பக்கத்திலும் அதனை மீளப் பெற்றுக் கொள்ளல் அதற்கெதிரான பக்கத்திலும் இடம்பெறக்கூடியவாறு களஞ்சிய சாலையில் பொருட்களை பொதி செய்கின்ற முறையாக அமைவது.

1 தட்டு முறையிலான பொதியிடல் முறை
2 இரண்டு தட்டுக்களுக்கிடையில் மேலதிகத்தட்டு
3 பின்பக்கமாக நகர்த்தக்கூடிய இறாக்கைகள்
4 தன்னியக்க பொதியிடல் முறை
5 இடத்துக்கிடம் கொண்டு செல்லக்கூடிய (அங்குமிங்கும்) தட்டுக்களுடனான சட்டகமுறை (..........)

13 முதல்வர் சார்பாக பொருட்களை கொள்வனவு செய்யும் போது அல்லது விற்பனை செய்யும் போது அக் கொடுக்கல் வாங்கலைத் தனது சொந்தப் பெயரில் மேற்கொள்கின்ற முகவர்?

1 பொறுப்பு முகவர்
2 ஏல விற்பனையாளர்
3 காரணிகர்
4 தரகர்
5 தரகு முகவர் (..........)

14 ஐரோப்பிய ஒன்றியத்திலும், G7 குழுவிலும் அங்கத்துவம் பெறும் நாடுகள்.

1 ஜெர்மன், பிலிப்பைன்ஸ், ஸ்பெய்ன்
2 ஜெர்மன், இத்தாலி, பிரான்ஸ்
3 ஜெர்மன், பிரான்ஸ், கனடா
4 பிரான்ஸ், கிரீஸ், ஜப்பான்
5 நெதர்லாந்து, ஜப்பான், இத்தாலி (..........)

15 முகாமைத்துவம் தொடர்பிலான சில பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

1 செயற்பாட்டு அடைவினை அளவிடலும் மாற்றங்களை இனம் காணலும் ......(i)...... குரிய கருமங்களாகும்.
2 ஊக்குவிப்பும் தொடர்பாடலும் ......(ii)...... குரிய கருமங்களாகும்.
3 அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைத்தல் ......(iii)...... குரிய கருமங்களாகும்.
4 நோக்கம் மற்றும் இலக்குகள் உருவாக்குதல் ......(iv)...... குரிய கருமங்களாகும்.

மேலே தரப்பட்ட பிரிவுகளில் காணப்படுகின்ற இடைவெளிகளுக்குப் பொருத்தமான எண்ணக்கருக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

a) முகாமைத்துவம c) சந்தைப்படுத்தல் e) ஒழுங்கமைத்தல்
b) திட்டமிடல் d) நெறிப்படுத்தல் f) கட்டுப்படுத்தல்

i,ii,iii,iv வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையினை ஒழுங்கு முறையாகக் காட்டும் தொகுதியினைத் தெரிவு செய்க.

1 a, d, e, f
2 f, d, b, c
3 f, d, e, b
4 b, c, d, f
5 e, a, b, d (..........)

16 வரையறுக்கப்பட்ட விஷ்ணு (தனி) கம்பனியானது தனது ஊழியர்களுக்காக நடாத்திய வருடாந்த ஒன்று கூடலின் போது அந்நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநரினால் கடந்த வருடத்தில் பல்வேறு திறமைகளைக் காட்டிய ஆண் பெண் ஊழியர்கள் பாராட்டப்பட்டு அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

முகாமைத்துவ இயக்குநர் செயற்பட்ட பிரதான வகிபாகம் மற்றும் உப வகிபாகம் என்பவற்றை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1 நபர்களுக்கிடையிலான வகிபாகம் - முதல்வர்
2 தகவல் வகிபாகம் - தகவல்களை வழங்குபவர்
3 தீர்மானமெடுத்தல் வகிபாகம் - வளங்களை ஒதுக்குபவர்
4 ஆளிடை வகிபாகம் - தலைவர்
5 தீர்மானமெடுத்தல் வகிபாகம் - முயற்சியாளர் (..........)

17 “டேஸ்ட்” பிஸ்கட் உற்பத்தி நிறுவனத்தின் சரக்கிருப்பு தொடர்பான தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- கட்டளையொன்றிற்கான கிரயம் ரூபா 300
- அலகொன்றிற்கான கிரயம் ரூபா 100
- மாதாந்தம் பொருட்களின் நுகர்வு 1000 அலகுகள்
- இருப்பைப் பேணுவதற்கான வருடாந்த கிரயம் அலகொன்றிற்கு ரூபா 5

இந்நிறுவனத்தின் பொருளாதாரக் கட்டளைக் கணியத்தின் அளவு

1 1000 அலகுகளாகும்.
2 1200 அலகுகளாகும்.
3 1600 அலகுகளாகும்.
4 3100 அலகுகளாகும்.
5 600 அலகுகளாகும். (..........)

18 உற்பத்தி நிறுவனமொன்றின் தரக்கட்டுப்பாடு மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டுக்காக பயன்படுத்துகின்ற நுட்ப முறைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. தரப்பாதுகாப்பு
B. ABC பகுப்பாய்வு
C. தரவட்டம்
D. புள்ளிவிபர ரீதியான செயன்முறைக்கட்டுப்பாடு
E. இரட்டைப் பாத்திர முறை
F. கணினி வேலைத் திட்டம்
G. இருப்பு மட்டத்தை உறுதிப்படுத்துகின்ற முறை
H. பூச்சிய வழு

மேலே தரப்பட்டவைகளுள் தரக்கட்டுப்பாட்டு முறைகளை மாத்திரம் உள்ளடக்கிய முறையினைத் தெரிவு செய்க.

1 A,E,G,H
2 B,D,F,G
3 B,E,G,H
4 A,C,D,H
5 A,D,E,F (..........)

19 A,B கூற்றுக்களினால் குறிப்பிடப்படுகின்ற வணிகக் கருத்துக்களுக்குப் பொருத்தமான சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் இரண்டையும் முறையாகக் காட்டுகின்ற விடையினைத் தெரிவு செய்க.

A– உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக விற்பனை செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல் வேண்டும்.

B– நுகர்வோரைத் தூண்டாமல் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாது.

1 உற்பத்திப் பொருள் எண்ணக்கரு, வாடிக்கையாளர் எண்ணக்கரு
2 விற்பனை எண்ணக்கரு, உற்பத்தி எண்ணக்கரு
3 விற்பனை எண்ணக்கரு, சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
4 உற்பத்தி எண்ணக்கரு, சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
5 சந்தைப்படுத்தல் எண்ணக்கரு, விற்பனை எண்ணக்கரு (..........)

20 ''சுவையான உற்பத்திகள்'' நிறுவனத்தின் உற்பத்திப் பொருள் கலவை கீழே தரப்பட்டுள்ளது.

<table>
<tr><td>ஐஸ்கிரீம்</td><td>பால் பக்கட்</td><td>குளிர்பானம்</td><td>பிஸ்கட்</td></tr>
<tr><td>வேனிலா</td><td rowspan="2">வெனிலா</td><td>மாம்பழம்</td><td>சொக்லட்</td></tr>
<tr><td>சொக்லட்</td><td>தோடம்பழம்</td><td>வேப்பர்ஸ்</td></tr>
<tr><td>ஸ்டோபரி</td><td rowspan="2">சொக்லட்</td><td rowspan="2">கலவைப் பழங்கள்</td><td rowspan="2">கிரீம்</td></tr>
<tr><td>புருட் அன்ட் நட்</td></tr>
</table>

மேலே தரப்பட்ட உற்பத்தி பொருள் கலவையில் நீளம், அகலம், சராசரி, ஆழம் என்பவற்றை முறையாகக் காட்டுகின்ற விடை எது?

1 1,2,3,4
2 3,1,2,4
3 1,2,4,3
4 4,3,1,2
5 4,1,3,2 (..........)

21 கண்டி பள்ளேகலை சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற 20க்கு 20 கிரிக்கெட் போட்டியை கண்டு களிப்பதற்காக சஜி, நதி மற்றும் அவர்களின் நண்பர்கள் இணைய வலையமைப்பினூடாக அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்ததுடன் உரிய திகதியில் புகையிரதத்தின் மூலம் கண்டியை வந்தடைந்தனர்.

மேலே தரப்பட்ட நிகழ்வில் கோடிடப்பட்டு காட்டப்பட்டுள்ள பதங்களினால் வெளிப்படுத்தப்படுகின்ற உற்பத்திப் பொருளை முறையாகக் காட்டுகின்ற விதையினை தெரிவு செய்க.

1 குழு / தகவல் / எண்ணம் / இடம்
2 இடம் / நிகழ்வு /தகவல் / சேவை
3 எண்ணம் / நிகழ்வு / இடம் / தகவல்
4 இடம் / அனுபவம் / நிகழ்வு / சேவை
5 குழு / சேவை / எண்ணம் / தகவல் (..........)

22 கொழும்பு பங்குப் பரிமாற்றத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற சாதாரண பங்குகள் தொடர்பில் கூறப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்களில் ஏற்றுக் கொள்ள முடியாத கூற்று யாது?

1 பங்குகளை கொள்வனவு செய்வோருக்கு கம்பனியின் உரிமையாளராக முடிதல்
2 நிலையான பங்கிலாப வீதமொன்று கிடைக்காமை.
3 மூலதனத்தை மீளச்செலுத்தும் போது முன்னுரிமை கிடைத்தல்.
4 கம்பனியின் நிர்வாக உரிமை கிடைக்கப் பெறல்.
5 ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றும் உரிமை கிடைத்தல். (..........)

23 வணிகமொன்றிற்கு நிதியீட்டல் செய்யக்கூடிய வழிகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. பங்கு வழங்கல்
B. வங்கி மேலதிகப் பற்று
C. வங்கிக் கடன்
D. குத்தகை
E. நிறுத்தி வைத்த வருமானம்
F. மேலதிகச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

மேலே தரப்பட்ட நிதியீட்டல் வழிமுறைகளுள் வெளியக, நீண்ட கால, நேரில் நிதியீட்டல் வழிமுறைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள விடை யாது?

1 A யும் B யும்
2 B யும் C யும்
3 C யும் D யும்
4 D யும் E யும்
5 E யும் F யும் (..........)

24 ஊழியர்களின் துன்பங்கள் துயரங்களை அறிந்து கொள்ளும் முறை மற்றும் ஊழியர்களின் துன்பங்கள் துயரங்களுக்கு தீர்வை முன் வைக்கக் கூடிய முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

மேலே தரப்பட்டவைகளுள் துன்பங்கள் துயரங்களை தீர்க்கின்ற முறைகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.

A. துன்பங்கள் துயரங்களைத் தீர்க்கின்ற முறையான நடைமுறை
B. விலகிச் செல்வதற்கான நேரடிக் கலந்துரையாடல்
C. திறந்த வழிக் கொள்கை
D. ஒன்றிணைந்த குழுமுறை
E. ஆலோசனை
F. ஊழியர் மனப்பாங்கு ஆய்வு
G. ஊழியர்களின் கருத்துக்களுக்கு நன்றாக செவிமடுத்தல்.
H. ஊழியர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துதல்.
I. முன்மொழிவுப் பெட்டி

1 A,C,D,E,G,H
2 A,B,D,E,F,G
3 B,C,D,E,G,F,I
4 C,D,E
5 A,B,C,D,E,F,G,I (..........)

25 கைத்தொழில் பிணக்கு காரணமாக தொழில் வழங்குநருக்கு ஏற்படுகின்ற அழுத்தமல்லாதது.

1 தொழிலில் அமைதியின்மை ஏற்படுவதன் காரணமாக நல்லுறவு வீழ்ச்சியடைதல்.
2 போட்டியாளர்கள் பலமடைதல்.
3 குறித்த பொருட்கள் சேவைகளின் விலை அதிகரித்தல்.
4 நிறுவனத்தின் நன்மதிப்பு அதிகரிப்பதன் காரணமாக இலாபத்தில் அதிகரிப்பு ஏற்படல்.
5 ஊழியர்களிடையே மனச் சஞ்சலம் ஏற்படல். (..........)

26 ஊழியர்களின் பொறுப்புக்கள் மற்றும் ஊழியர்களின் கடமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. நிறுவனத்தின் நன்மதிப்பினைப் பாதுகாத்தல்.
B. அமைப்பின் நோக்கம் நிறைவேறும் வகையில் வேலை செய்தல்.
C. நிறுவனத்தின் அபிவிருத்திக்காக ஆர்வமாக இருத்தல்.

D. வேலைத்தளத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளல்.
E. தொழில் ஒப்பந்தத்திற்கேற்ப கருமங்களை நிறைவேற்றல்.
F. நிறுவனத்தின் நன்மதிப்பினைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்.

மேலே தரப்பட்டவற்றுள் ஊழியர்களின் பொறுப்பினை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி யாது?

1 A,C,D
2 D,E,F
3 A,C,F
4 A,D,E
5 B,D,E (..........)

27 பல்வேறு நியதிகளும் அந்நியதிகளை அடிப்படையாகக் கொண்ட தகவல் வகைப்படுத்தல்களும் கீழே தரப்பட்டுள்ளன.

மேலே தரப்பட்ட நியதிகளின் சரியான ஒழுங்கு முறைக்கேற்ப தகவல்களை வகைப்படுத்தியுள்ள தொகுதி எது?

| நியதிகள் | தகவல் வகை |
|---|---|
| 1. மூலங்களின் அடிப்படையில் | A. அளவு ரீதியான தகவல்கள், பண்பு ரீதியான தகவல்கள் |
| 2. தன்மையின் அடிப்படையில் | B. உபாய வழிமுறைத் தகவல்கள், செயற்பாட்டுத் தகவல்கள், தந்திரோபாயத் தகவல்கள் |
| 3. முகாமைத்துவ தொழிற்பாட்டிற்கேற்ப | C. உள்ளக, வெளியக |
| 4. முகாமைத்துவ மட்டத்திற்கேற்ப | D. நிதித் தகவல்கள், செயற்பாட்டுத் தகவல்கள், சந்தைப்படுத்தல் தகவல்கள், மனித வளத் தகவல்கள் |

1 1-D, 2-C, 3-A, 4-B
2 1-A, 2-C, 3-B, 4-D
3 1-C, 2-A, 3-D, 4-B
4 1-A, 2-C, 3-C, 4-B
5 1-B, 2-C, 3-D, 4-A (..........)

28 கணினி முறைமை எதிர் நோக்குகின்ற இடர்களை குறைத்துக் கொள்வதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கை அல்லாதது,

1 கடவுச்சொல் (Password)
2 பயனர் பெயர் (User name)
3 தகவல்களின் பிரதியொன்றை வெளியிடாமல் களஞ்சியப்படுத்தல்.
4 பிரபல்யமான சின்னக் குறியீட்டுடன் கணினியைப் பயன்படுத்துதல்
5 கணினி அலகுக்கான பாதுகாப்பு வழியினைப் பயன்படுத்துதல் (..........)

29 வணிகத் திட்டமொன்றின் அடிப்படைகள் X நிரலிலும் அவற்றிலுள்ள அடிப்படைத் தகவல்கள் Y நிரலிலும் கீழே காட்டப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| A. நிறைவேற்றுச் சுருக்கம் | a. பொருட்கள் சேவைகள் தொடர்பில் |
| B. வணிக விபரம் | b. தொழிற்சாலை இட அமைவுத் திட்டம் |
| C. செயற்பாட்டுத் திட்டம் | c. போட்டி நிலைப்பகுப்பாய்வு |
| D. சந்தைப்படுத்தல் திட்டம் | d. பதவிகளும் பொறுப்புகளும் |
| E. மனித வளத்திட்டம் | e. தூர நோக்கும் இலட்சிய நோக்கும் |

X மற்றும் Y நிரல்களை சரியாக தொடர்புபடுத்துகின்ற போது கிடைக்கின்ற விடை எது?

1 Ae, Ba, Cb, Dc, Ed
2 Ab, Bc, Cd, Da, Ee
3 Ac, Bb, Cd, Da, Ee
4 Ab, Bc, Cd, De, Ea
5 Ad, Bc, Ca, De, Eb (..........)

30 வணிகத்திட்டமொன்றின் கட்டாயமாக இருக்க வேண்டிய பகுதியல்லாதது.
1 வணிக நிறுவனம் தொடர்பிலான விபரம்
2 செயற்பாட்டுத் திட்டம்
3 சந்தைப்படுத்தல் திட்டம்
4 கடந்த வருடத்தின் நிதிக் கூற்று
5 நிதித்திட்டம் (..........)

இலக்கம் 31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும் போது பொருத்தமான சொல்/ சொற்களையிட்டு இடைவெளிகளை நிரப்பவும்.

31 அ) மூலப்பொருளொன்றினால் மனிதத் தேவை நிறைவேற்றப்படுகின்ற முறையிலேயே முடிவுப் பொருளொன்றை உருவாக்குவதினூடாகவும் ................................உருவாக்கப்படுவதுடன் ஆற்றல்களையும் திறமைகளையும் மனிதத் தேவைகளுக்கேற்ப பயன்படுத்துவதினூடாக................................உருவாகும்.

ஆ) வணிகத்தில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தாத எனினும் குறிப்பிடத்தக்க மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழல்.............................எனப்படுவதுடன் வணிகச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய எனினும் வணிகத்தினால் மாற்ற முடியாத சூழல்................................எனப்படும்.

32 (அ) வணிகமொன்று நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கு நிகழ்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான கருமமாக அமைவது தனது சமூகப் பொறுப்புக்களை குறிப்பிட்ட தரப்பினர்களுக்கு சிறப்பாக நிறைவேற்றுவதாகும். அத்தரப்பினர்களில் உரிமையாளர்கள், ஊழியர்கள்,.........................................................மற்றும் .................................................என்போர் பிரதானமானவர்களாவர்.

(ஆ) தனிநபர்களின் அல்லது வணிகங்களின் வருமானம் செல்வம் அல்லது சொத்துக்கள் என்பவற்றிற்கேற்ப அறவிடப்படுகின்ற வரி..............................என அழைக்கப்படுவதுடன் வரியினை செலுத்துபவர் ஏற்றுக்கொள்ளத் தேவையற்ற ஏனையவர்களின் மீது சுமத்தக்கூடிய வரி..........................எனப்படும்.

33 (அ) தனியுரிமை வணிகத்தையும் பங்குடமை வணிகத்தையும் பதிவு செய்கின்றபோது.........................இடம்பெற மாட்டாது. என்பதுடன் கம்பனியொன்றை பதிவு செய்கின்றபோது.......................................இடம்பெறும்.

(ஆ) அனைத்து பங்காளரும் தனதும் ஏனைய பங்காளரினதும் பிரதிநிதியாகவும் முதல்வராகவும் கருதுதல்..........................................எனப்படுவதுடன் பங்காளரிடையே................................................இல்லாத போது இலாப நட்டத்தை சமமாக பகிர்ந்து கொள்ளல் வேண்டும்.

34 (அ) இடை நடுவர்கள் என்பது உற்பத்திப் பொருட்களை விநியோகிக்கும் போது..................................மற்றும் ..........................................இடையில் விநியோகச் செயன்முறையில் சம்பந்தப்படுகின்ற பிரிவினராவார்.

(ஆ) இறக்குமதியாளரின் வேண்டுகோளுக்கேற்ப.............................................சார்பாக அவரின் வங்கியினால் ஏற்றுமதியாளரின் வங்கிக்கு.............................................விநியோகிக்கப்படும்.

35 (அ) குழுவில் அங்கத்தவர்களின் தொழில்களுடன் தொடர்புபட்ட கருமங்களில் வழிகாட்டல்களையும் அழுத்தங்களையும் பிரயோகிக்கின்ற செயன்முறை....................................................எனப்படுவதுடன் அது .................................................செயன்முறைக்குரிய பிரதான கருமமொன்றாகும்.

(ஆ) தூரநோக்கு, இலட்சிய நோக்கு, நோக்கம், இலக்கு என்பவற்றை அடைந்து கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதனை.......................................காட்டுவதுடன்.....................................என்பது குறித்த கருமமொன்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்துகின்ற முறைகள் தொடர்பில் அவற்றை பிரதான மற்றும் துணைப்பிரிவுகளாகப் பிரித்து விபரிப்பதாகும்.

36 (அ) செயன்முறைத் தள அமைப்பின் போது.....................................ஈடுபட்டுள்ள ஊழியர்கள் ஓர் இடத்தில் நிறுத்தப்படுவதுடன்....................................................சுற்றி வர பணிகள் பாய்ந்து செல்லும் வகையில் தள அமைப்பும் திட்டமிடப்படும்.

(ஆ) மறுகட்டளை மட்டத்தை கணிப்பிடுகின்ற போது காலப்பகுதிக்குரிய.......................................மற்றும் ................................................என்பன கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

37 (அ) நிறுவனமானது தனக்குரிய வலைத்தளம், முகப்புத்தகம் (face book) போன்ற ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்கின்ற தொடர்பாடல்............................................எனப்படுவதுடன் நுகர்வோர்கள் அல்லது நிறுவனத்திற்கு வெளியே தனி நபர்கள் சுயாதீனமாக நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் (Viral Marketing) போன்ற ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடல்............................................... என அழைக்கப்படும்.

(ஆ) இலத்திரனியல் சந்தைப்படுத்தல் மற்றும் கட்லொக் ஊடாக விற்பனை என்பன..................................... காகவும் வீதி நாடகம், விளையாட்டுக்கள்..............................................என்பனவற்றிற்கு பயன்படுத்தப்படுகின்ற சில முறைகளாகும்.

38 (அ) வணிகங்களை நவீனமயப்படுத்தல் தொடர்பான தீர்மானம்..........................................எனப்படுவதுடன் வியாபார சரக்கிருப்பு தொடர்பான தீர்மானம்.............................................ஆகும்.

(ஆ) கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தில் முழுமையான அங்கத்தவராக........................................................... செயற்படுவதுடன் அவை கொழும்புப் பங்கு பரிமாற்றகத்தில்............................................................செயற்பட்டு வருகின்றன.

39 (அ) தொழிலை எதிர்பார்த்துள்ள தனிநபரின் திறன், மனப்பாங்கு, ஈர்ப்பு, பெறுமானம், பிரதி விம்பம் என்பவற்றை அளவிடுவதற்கு...........................................பரீட்சைப் பயன்படுத்தப்படுவதுடன் தெரிவு செய்த நபரை உரிய தொழிலில் குறித்த வேலையினை நிறைவேற்றுவதற்கு காணப்படுகின்ற உண்மையான திறமையானது................................................பரீட்சை மூலம் அளவிடப்படும்.


(ஆ) தொழிற்சங்க நடவடிக்கையாக தொழில் செய்யும் இடத்திலுள்ள இயந்திராதிகளை இயக்க முடியாதவாறு வாயிற்கதவிற்கு பூட்டினை இட்டு மூடி விடுதல் அல்லது அதன் ஒரு பகுதியினை கழட்டி விடுதல்.................................................எனப்படுவதுடன் தமது கோரிக்கைகளை வெல்வதற்கு வணிகம் அமைந்துள்ள இடத்தின் முன்னால் அல்லது பொதுமக்கள் நடமாடுமிடத்தில் ஒன்றுகூடி ஊழியர் குழுவானது உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு தமது எதிர்ப்பைக் காட்டுதல்.........................................எனப்படும்.

40 (அ) செயன்முறை இயலுமை, செயற்பாடுகள், தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் பயிற்சிகள் (*Practices*) என்பவற்றை உள்ளடக்கிய...............................................முறையானது நிறைவேற்று உதவி முறைமையை பலப்படுத்துவதுடன் இம்முறையானது................................................பயன்படுத்துகின்ற தரவு மற்றும் தகவல்களைப் பயன்படுத்தியே உருவாக்கப்படுகிறது.

(ஆ) தொழிலின் சமகால நிலமை, விற்பனை, இலாபம், விருத்தி விகிதம் மற்றும் ஏனைய போக்குகளுடன் தொடர்புடைய..................................................பகுப்பாய்வினூடாக மேற்கொள்ளப்படுவதுடன் உற்பத்திப் பொருளின் வகை, விற்பனையின் அளவு, அலகொன்றிற்கான விலை, வருடாந்த வருமானத்தை மதிப்பீடு செய்தல் என்பன..................................................ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

- 41 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை எழுதுக.

41 நிலைபேறான அபிவிருத்தி எண்ணக்கரு தொடர்பில் காட்டப்பட்டுள்ள பின்வரும் வரைபடத்தில் 1,2,3,4 இலக்கங்களினூடாக காட்டப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.




1 .......................................................................................................................................

2 .......................................................................................................................................

3 .......................................................................................................................................

4 .......................................................................................................................................

42 கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள பண்புகளுக்குப் பொருத்தமான தனியார் துறை, பொதுத்துறை அமைப்பு வகைகளுக்கு தலா ஒவ்வோர் உதாரணம் தருக.

| பண்புகள் | தனியார் துறை | பொதுத்துறை |
|---|---|---|
| பட்டியல் படுத்தக்கூடிய | 1............................................................. | 2............................................................. |
| சட்ட ரீதியான ஆளுமை இலலாத | 3............................................................. | 4............................................................. |

43 முயற்சியாளரல்லாத வணிகரொருவருடன் ஒப்பிடும் போது முயற்சியாளரொருவரிடம் காணப்படுகின்ற **நான்கு** வேறுபாடுகளைத் தருக.

1 ..........................................................................................................................................
2 ..........................................................................................................................................
3 ..........................................................................................................................................
4 ..........................................................................................................................................

44 சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களை இனம் காண்பதற்கு இலங்கையில் ஒவ்வொரு நிறுவனங்களும் பயன்படுத்துகின்ற வேறுபட்ட நியதிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அந்நியதிகளை முன்வைத்த நிறுவனத்தைக் குறிப்பிடுக.

| **நியதிகள்** | **நிறுவனம்** |
|---|---|
| 1. நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை 50 க்கு குறைவானது. | ........................................................................ |
| 2. பயன்படுத்துகின்ற மின் சக்தி வலு கிலோ வோட் 50 அம்பியரிற்கு குறைவானது. | ........................................................................ |
| 3. ஊழியர் எண்ணிக்கை 25 இற்கு குறைவானது | ........................................................................ |
| 4.முதலிடப்பட்ட மூலதனம் 20 மில்லியனுக்கு குறைவானது | ........................................................................ |

45 காப்புறுதி ஒப்பந்தமொன்று ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அதில் இருக்க வேண்டிய **நான்கு** அடிப்படைகளைத் தருக.

1 ..........................................................................................................................
2 ..........................................................................................................................
3 ..........................................................................................................................
4 ..........................................................................................................................

46 முகாமையாளரொருவருக்கு அதிகாரம் கிடைக்கப்பெறுகின்ற முறைகளுக்கேற்ப பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

| பதவிக்கேற்ப கிடைக்கின்ற அதிகாரம் | தனிநபரின் அடிப்படையில் கிடைக்கின்ற அதிகாரம் |
|---|---|
| | |
| | |

47 இயந்திர உற்பத்தித்திறன், உழைப்பு உற்பத்தித்திறன் என்பவற்றை மேம்படுத்தக் கூடிய இரு முறைகளைத் தருக.

| இயந்திர உற்பத்தித் திறன் | உழைப்பு உற்பத்தித் திறன் |
|---|---|
| | |
| | |

48 சந்தைப்படுத்தல் தொடர்பாடல் கலவையின் பிரதானமான **நான்கு** கருவிகளைக் குறிப்பிடுக.

1 ..........................................................................................................................................

2 ......................................................................................................................................

3 ......................................................................................................................................

4 ......................................................................................................................................

49 மனிதவலுத் திட்டமிடலில் உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு** தகவல்களைத் தருக.

1 ..............................................................................................................................

2 ..............................................................................................................................

3 ..............................................................................................................................

4 ..............................................................................................................................

50 பின்வரும் குறியீடுகளினூடாக காட்டப்படுகின்ற நிறுவனங்கள் எவை?

1.....................................................................

2.....................................................................

3.....................................................................

4.....................................................................

# க.பொ.த. (உயர் தரம்)

# வணிகக்கல்வி II

Channel NIE

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை

**வணிகக் கல்வி ii** நேரம் 03 மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்

- ஒரு பகுதியிலிருந்து ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

01) கீழே தரப்பட்டுள்ள நிகழ்வினை வாசித்து பகுதி I, II இற்கு விடையளிக்கவும்.

தனது பிரதேசத்தில் ஏற்பட்டு வருகின்ற வேகமான அபிவிருத்தி காரணமாக மக்களின் **அத்தியவசியத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு** ருக்சானினால் ஏசியன் கிச்சன் (Asian Kitchen) எனும் பெயரில் உணவகமொன்று ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் அதனுடன் இணைந்ததாக **தனது உணவகத்தினதும், பிரதேசத்திலுள்ள ஏனைய உணவகங்கள் மற்றும் சிறிய சில்லறை வியாபாரங்களையும் இலக்காகக் கொண்டு** சிறிய வெதுப்பகமொன்றும் (பேக்கரி) ஆரம்பிக்கப்பட்டது. உணவகத்திலும் வெதுப்பகத்திலும் வேலை செய்வதற்கும் விநியோகக் கருமங்களுக்காகவும் **அனுபவமுள்ள ஊழியர்கள் எட்டு பேரை இணைத்துக் கொள்வதற்கு வார இறுதியில் வெளியாகும் பத்திரிகையில் பத்திரிகை விளம்பரமொன்றும்** வெளியிடப்பட்டது.

I) அ) மேலே தரப்பட்ட நிகழ்வில் அத்தியவசியத் தேவைகளை நிறைவேற்றுதல் என்பதனூடாக எந்த எண்ணக்கருவானது ஞாபகமூட்டப்படுகின்றது? ருக்சான் இதற்காக வழங்குவதற்கு உத்தேசிக்கின்றவைகளுக்கான உதாரணங்களைக் குறிப்பிடவும்.

ஆ) மேலே தரப்பட்ட நிகழ்விற்கேற்ப பிரதான வணிகம் மற்றும் ஏனைய வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகள் எவ்வாறு வகைபடுத்தப்படுகின்றது என்பதை விளக்குக?

II) அ) ருக்சானினால் ஆரம்பிக்கப்பட்ட வெதுப்பகத்தினால் (பேக்கரி) நடைமுறைப்படுத்தப்படலாம் எனக் கூறக்கூடிய வணிகச் செயன்முறையினை உள்ளீடு வெளியீடு அட்டவணையின் ஊடாக வெளிப்படுத்திக் காட்டவும்.

ஆ) ருக்சான் வணிகத்துடன் தொடர்புடைய நிகழ்வில் குறிப்பிடப்படுகின்ற வணிகத் துணைச் சேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

III) ‘நீங்கள் பாடசாலை மீது அக்கறை காட்டுவது போன்று பாடசாலையும் உங்கள் மீதும் ஏனைய தரப்பினர்கள் மீதும் அக்கறை காட்டுகின்றது’ நீங்கள் உட்பட அப்பல்வேறு பிரிவினர்களை பாடசாலையின் அக (உள்ளக) புற (வெளியக) பிரிவினர்களாக வகைப்படுத்திக் காட்டவும்.

IV) நிலைபேறான அபிவிருத்தியினை உண்மை நிலைக்கு கொண்டு வருவதாயின் வணிகங்கள் மூன்று பிரதான காரணிகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

அ) அம் மூன்று காரணிகளையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒரு காரணியை உறுதிப்படுத்துவதற்கு வணிகமொன்று எடுக்கக்கூடிய **04** நடைமுறைகளைக் குறிப்பிடுக.

ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிறுவனமொன்று சகல தரப்பினர்களுக்கும் நன்மை பயக்கக்கூடியவாறு ஒழுக்க விழுமியக் கோவை ஒன்றை தயாரிப்பதற்கு உத்தேசிக்கின்றது. அதில் உள்ளடக்கப்பட வேண்டிய ஒழுக்க விழுமியங்கள் **04** ஐக் குறிப்பிடுக.

V) வெங்காயம் கொள்வனவு செய்வதற்கு சென்ற அர்ச்சனாவிற்கு மோசமான அனுபவமொன்றிற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. சகல வெங்காயங்களும் நல்ல நிலையில் காணப்படாமையினால் நல்ல நிலையில் காணப்பட்ட வெங்காயங்களை தெரிவு செய்து எடுத்தபோது கடை உரிமையாளன் அதற்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்தான். அதற்கு அர்ச்சனா சிறப்புக் கடையில் ஒருவர் தனக்குத் தேவையான பொருட்களை தேவையான அளவில் தெரிவு செய்து அவற்றைக் கொள்வனவு செய்ய முடியும் என கடை உரிமையாளனிடம் கூறினாள். அதனை செவிமடுக்காத அவன் மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி அர்ச்சனாவைத் திட்டித் தீர்த்தான்.

அ) மேலே தரப்பட்ட நிகழ்வினூடாக சிறப்புக் கடை வழங்கியுள்ள உரிமைகளில் கடை உரிமையாளன் மீறியுள்ள நுகர்வோன் உரிமை யாது?

ஆ) அர்ச்சனா முகங்கொடுத்த இந்தச் சம்பவத்திற்கு எதிராக முறைப்பாட்டினை முன்வைக்கக்கூடிய நிறுவன அதிகாரிகள் **இருவரைக்** குறிப்பிடுக.

02) தேசிய பத்திரிகையொன்றில் வெளியிடப்பட்டிருந்த தலைப்புச் செய்தியொன்று கீழே தரப்படுகின்றது.

I) இலங்கை மத்திய வங்கியானது கொள்கை ரீதியான வட்டி வீதத்தை அதிகரித்தமையால் வணிக வங்கிகளுக்கும் தமது வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அ) கொள்கை ரீதியான வட்டி வீதம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ஆ) வணிக வங்கிகள் கடனுக்கான வட்டி வீதத்தை அதிகரித்தலானது வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முறையினை விளக்குக? (02 புள்ளிகள்)

II) பொதுவாக சிறப்பு வியாபார நிறுவனங்கள் சாதாரண சில்லறை வியாபார நிலையங்களை விடவும் நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்து செயற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. சாதாரண சில்லறை வியாபார வணிகரொருவர் இவ்வாறு நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கு பின்பற்றக்கூடிய **04** நடைமுறைகளைத் தருக?

III) பொருளாதாரப் பிரச்சினைகள் நாட்டில் காணப்பட்டபோது கூட்டுறவு வணிகங்கள் சிறந்த சேவைகளை மக்களுக்காக ஆற்றியது.

அ) கூட்டுறவு வணிகத்தை அறிமுகப்படுத்துவதற்கு பொருத்தமான வரைவிலக்கணமொன்றை முன் வைக்கவும். (02 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைக்குரிய நிலமையின் கீழ் நுகர்வோர் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுறவு வணிகங்களின் பங்களிப்பை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?

IV) பிஸ்கட் தொழிலில் ஈடுபட்டுள்ள பிரபல்யமான கம்பனிகள் இரண்டு தனி நிறுவனமொன்றாக செயற்படுவதற்கு திட்டமிட்டுள்ளன.

அ) இவ் வணிகங்கள் இணைந்துள்ள இணைப்பின் வகையை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ஆ) இந்த இணைப்பின் மூலம் இரு கம்பனிகளுக்கும் பெற்றுக் கொள்ளக்கூடிய **04** அனுகூலங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

V) அ) கீழே தரப்பட்டுள்ள வணிக நிறுவனங்களின் பெயர்களின் முன்னால் வணிக நிறுவன வகையை குறிப்பிடுக.

| **வணிகத்தின் பெயர்** | **வணிக நிறுவன வகை** |
|---|---|
| வில்சன் அன்ட் கம்பனி | |
| நில்மினி ஸ்டோர்ஸ் | |
| வ/ப அர்னலி பொதுக்கம்பனி | |
| வ/ப சதருவன் (தனிக்) கம்பனி | |

ஆ) அரச கம்பனியொன்றின் **இரு** பண்புகளைத் தருக (02 புள்ளிகள்)

03)

I) தான் எடுத்த காரியத்தை முடிக்கும் வரையில் மிக ஆர்வமாக செயற்படுகின்ற சஜித் ஏனையவர்களின் கருத்துக்களை செவிமடுக்காது தனது கருத்து மற்றும் ஆற்றல் என்பவற்றை உச்ச அளவில் செயற்படுத்தி தனது வணிகத்திற்கு தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றார்.

அ) சஜித்தின் நடத்தையை வெளிப்படுத்துகின்ற மேற்குறிப்பிட்ட நிகழ்வில் உள்ளடங்கியுள்ள முயற்சியாண்மைப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக? (01 புள்ளி)

ஆ) நிகழ்வில் உள்ளடங்கியுள்ள சஜித்தின் முயற்சியாண்மைத் திறன்களை குறிப்பிடுக? (01 புள்ளி)

இ) சஜித் தனது பண்புகளையும் திறன்களையும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கான சுயமதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களைத் தருக?

(02 புள்ளிகள்)

II) சிற்றளவு வணிகர்கள் 04 பேரின் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| சித்திரா | எனது வணிகத்திற்கு இன்னும் ரூபா 20 இலட்சம் தேடிக் கொள்ள முடியுமாயின் புதிய பண்டமொன்றை சந்தையில் முன் வைத்திருக்கலாம். |
| சாகிர் | நான் தற்போது பயன்படுத்துகின்ற இயந்திராதிகள் மிகவும் பழமையானவை. புதிய இயந்திராதிகள் என்னிடம் இருந்திருந்தால் பொருட்களை ஏற்றுமதி செய்திருக்கலாம். |
| நுயனா | நான் எதிர்பார்க்கின்ற அளவு இலாபம் இவ் வணிகத்தினால் எனக்கு கிடைப்பதில்லை. எனது முதலீடு சரியானதா என்பதில் எனக்கு சந்தேகம் ஏற்படுகிறது. |
| ரவீகரன் | எனது உற்பத்திப் பொருட்களை எவ்வாறு விற்பனை செய்வது என்பதே எனக்குள்ள பிரச்சினையாகும். |

மேலே தரப்பட்ட சிற்றளவு வணிகங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அரசு வழங்குகின்ற வசதி மற்றும் அவற்றை வழங்குகின்ற நிறுவனம் தலா ஒவ்வொன்று தருக.

(04 புள்ளிகள்)

III) உயர்தரத்தில் மிகச் சிறப்பாக சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதியினை பெற்றுள்ள சரவணன் அறிவு அளவிடைப் போட்டியில் 1) **ரூபா ஒரு மில்லியன் பரிசுப் பணத்தினையும்** வெற்றி கொண்டுள்ளார். அப்பணத்தின் மூலம் அவருக்கு மிகவும் தேவையாகவிருந்த 2) **லப்டொப் கணினி இயந்திரமொன்றை இரண்டு இலட்சம் ரூபாவிற்கு கொள்வனவு செய்ததுடன்** அவரின் கல்வி செயற்பாடுகளுக்காக தந்தை பெற்றிருந்த கடன் 3) **ரூபா மூன்று இலட்சம் கடனைத் தீர்ப்பதற்கு குறித்த தொகையினை தந்தைக்கு வழங்கினார்.** எஞ்சிய பணத்தினை தாயின் அறிவுரைக் கேற்ப 4) **தங்கைகளுக்கு இரண்டு நிலையான வைப்புக்களையும் ஆரம்பித்தார்.**

அ) மேலே நிகழ்வில் கருப்பு எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள பணத்தின் கருமங்களை முறையாகத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) சாதாரண சேமிப்பு வைப்புக் கணக்கில் பணத்தை வைப்பிலிடுவதை விட நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்வதன் மூலம் சரவணனுக்கும் அவனது இரு தங்கைகளுக்கும் பெற்றுக்கொள்ளக்கூடிய இரு அனுகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

IV) காசோலையினைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு வணிக வங்கிகள் அறிமுகப்படுத்தியுள்ள நடைமுறைக் கணக்கு எனப்படுகின்ற கேள்வி வைப்பிலுள்ள காசு காசோலைகளைப் பயன்படுத்தாமலும் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான சந்தர்ப்பம் தற்காலத்தில் நடைமுறைக் கணக்குரிமையாளர்களுக்கு கிடைத்துள்ளது.

அ) மேலே தரப்பட்ட கூற்றினை உறுதிப்படுத்துவதற்கான **இரண்டு** காரணிகளை முன்வைக்கவும் (02 புள்ளிகள்)

ஆ) வங்கியில் உங்களுக்கு காணப்படுகின்ற சேமிப்பு வைப்புக்காக வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கணினி மென்பொருள் வசதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய **நான்கு** கொடுக்கல் வாங்கல்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

V) அ) அலகுப் பொறுப்புடன் தொடர்புடைய பிரிவினர்களை குறிப்பிட்டு அப் பிரிவினர்களுக்கிடையில் காணப்படுகின்ற தொடர்பினை விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) "இலத்திரனியல் பணத்தினைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் செய்வதனூடாக வாடிக்கையாளருக்கும் வியாபாரிகளுக்கும் அனுகூலங்களே எப்போதும் கிடைக்கப்பெறுகின்றது" இக்கூற்று தொடர்பில் சார்பாகவும் எதிராகவும் விடயங்கள் தலா **இரண்டு** வீதம் தருக? (02 புள்ளிகள்)

04)

I) அ) காப்புறுதி ஒப்பந்தங்கள் வாழ்க்கையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. கீழே அட்டவணையில் காப்புறுதி வகை தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது காப்புறுதி செய்யும் உரிமை காணப்படல் கட்டாயமாயின் "√" அடையாளத்தையும் தேவையில்லாவிடின் "x" அடையாளத்தையும் இடவும். (02 புள்ளிகள்)

| காப்புறுதி வகை | ஒப்பந்தத்திற்கு வருகின்ற போது | நட்ட ஈட்டினை பெற்றுக்கொள்ளும் போது |
|---|---|---|
| ஆயுள் காப்புறுதி | | |
| கடற் காப்புறுதி | | |
| ஆதனக் காப்புறுதி | | |

ஆ) மோட்டார் வாகனக் காப்புறுதியில் தவணைக் கட்டணத்தை தீர்மானிக்கும் **இரு** காரணிகளைத் தருக. (02 புள்ளிகள்)

II) அ) வாய்மொழி மூலமான தொடர்பாடலின் **நான்கு** அனுகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) சமிஞ்சையும் குறியீடும் தொடர்பாடல் ஊடகத்தின் **நான்கு** பிரதிகூலங்களைத் தருக (02 புள்ளிகள்)

III) வசந்தரா ட்ரேடர்ஸ் அப்பிள் மற்றும் திராட்சைப் பழங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து உள்நாட்டிலுள்ள மொத்த வியாபார வணிகங்களுக்கு விநியோகிக்கும் வணிகமொன்றாகும். வசந்தரா தனது களஞ்சியத்தினை அதிவேகப் பாதைக்கு அண்மையிலுள்ள சிறிய இடமொன்றில் நிறுவி நடத்திச் செல்வதுடன் களஞ்சியசாலையில் பழவகைகளுக்கு முறையாக இடங்கள் ஒதுக்கப்பட்டு உரியவாறு வெப்பநிலையும் பேணப்பட்டு பழவகைகள் பொதியிடப்பட்டுள்ளதுடன் விநியோகத்தை வேகமாக மேற்கொள்வதற்கும், களஞ்சியசாலையினுள் பொதி செய்த பழவகைகளை அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கும் உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அ) மேலே தரப்பட்ட நிகழ்விற்கேற்ப வசந்தரா ட்ரேடர்ஸ் தனது களஞ்சியத்தை நிறுவிய போது கவனம் செலுத்திய **நான்கு** விடயங்களைக் குறிப்பிட்டு அதற்கான உதாரணங்களை நிகழ்விலிருந்து எடுத்து எழுதுக. (02 புள்ளிகள்)

ஆ) முறையாகப் பொதி செய்தல், களஞ்சியசாலையினுள் அங்குமிங்கும் கொண்டு செல்வதற்கு உபகரணங்களை பயன்படுத்துதல் என்பவற்றினூடாக "வசந்தரா ட்ரேடர்ஸ்" நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

IV) அ) சுதந்திர வியாபாரம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ஆ) சுதந்திர வியாபாரத்தில் தாக்கம் செலுத்துகின்ற தீர்வையல்லாத தடைகளுக்கு **நான்கு** உதாரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

V) அ) இலத்திரனியல் வியாபாரத்தினால் வணிகருக்கு கிடைக்கும் கிரய அனுகூலங்கள் **இரண்டை** உதாரணங்களுடன் விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) வெளிநாட்டு வியாபாரத்தின் போது பின்வரும் சந்தர்ப்பங்கள் **இரண்டின்** போது பெற்றுக்கொள்ள வேண்டிய **இரு** ஆவணங்களைத் தருக.

i) மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் போது அவை ஏற்றுமதிக்கு பொருத்தம் என்பதை உறுதிப்படுத்துவதற்கு

ii) விபத்துக்குள்ளான மோட்டார் வாகனமொன்றை ஏற்றுமதி செய்யும் போது அதன் பொறுப்பினை ஏற்றுமதியாளர் பொறுப்பேற்பதனை உறுதிப்படுத்துவதற்கு (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05)

I) முகாமைத்துவமானது பொதுவாக அமைப்புக்களின் நோக்கம் இலக்குகளை அடைவதற்கு மாத்திரமன்றி தனிநபர்களின் நோக்கம் இலக்குகளினை அடைவதற்கும் பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

அ) தனிநபர்களின் நோக்கங்கள் இலக்குகளை அடைவதற்கு முகாமைத்துவம் பங்களிப்புச் செய்கின்ற **நான்கு** முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) நோக்கம், இலக்கு என்பவற்றுக்கு இடையில் காணப்படுகின்ற தொடர்பினை விளக்குக. (02 புள்ளிகள்)

II) நிறுவனமொன்றில் முறையாகத் தயாரித்த திட்டமானது ஒழுங்கமைக்கப்படுவது அதிகாரிகளின் ஆற்றல்களினாலேயே கிடைக்கப்பெறுகிறது.

அ) அமைப்பொன்றிற்கு தலைமைத்துவத்தின் தேவைப்பாட்டினை காட்டுவதற்கான **நான்கு** விடயங்களைத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) தனி நபரொருவர் தலைவராக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு கட்டாயமாக பூர்த்தி செய்ய வேண்டிய **நான்கு** நிபந்தனைகளைத் தருக. (02 புள்ளிகள்)

III) றிச்சர்ட் அச்சக நிறுவனமானது அப்பியாசக் கொப்பிகளை அச்சிடுவதற்கும், சஞ்சிகைகளை அச்சிடுவதற்குமென இரு பிரிவுகளை நடத்தி செல்கின்றது. சஞ்சிகை அச்சிடல் பிரிவிற்கென அண்மையில் நவீன அச்சு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் கடந்த வாரத்தினுள் அந்நிறுவனத்தின் புத்தக அச்சிடல் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வகை | மதிப்பிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | உண்மையான புத்தகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அப்பியாசக் கொப்பிகள் | 10000 | 10000 |
| சஞ்சிகைகள் | 8000 | 6000 |

சஞ்சிகை அச்சிடல் பிரிவிற்கு உத்தேச இலக்கினை அடைந்து கொள்ள முடியாமல் போனமைக்கான காரணத்தை குறிப்பிடும் போது அப்பிரிவின் முகாமையாளர் அந்த அச்சு இயந்திரத்தை உரியவாறு இயக்குவதற்கு அந்நிறுவனத்திலுள்ள இரு ஊழியர்களும் உரிய முறையில் பயிற்சியினைப் பெற்றிருக்கவில்லை என்பதனால் எதிர்வரும் வாரத்தில் அவர்களுக்குரிய பயிற்சியை பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

அ) இரு புத்தக வகைகளினதும் காலப்பகுதிக்கான மாற்றங்களை வெவ்வேறாக காட்டுக. (02 புள்ளிகள்)

ஆ) சஞ்சிகை அச்சிடல் பிரிவின் முகாமையாளர் பயன்படுத்தியுள்ள நுட்ப முறையினை என்ன பெயரினால் அழைக்கலாம்? (02 புள்ளிகள்)

இ) உத்தேச உற்பத்தி அலகுகளின் அளவினை அடைந்து கொள்வதற்கு சஞ்சிகை அச்சிடல் பிரிவின் முகாமையாளர் பின்பற்றியிருக்க வேண்டிய மிக பொருத்தமான கட்டுப்பாட்டு நுட்பமுறை யாது? (02 புள்ளிகள்)

ஈ) முகாமைத்துவ கட்டுப்பாட்டு செயல்முறையின் நான்காவது படிமுறையினை குறிப்பிட்டு அதற்கான உதாரணமொன்றினை நிகழ்விலிருந்து எடுத்து எழுதிக் காட்டுக. (04 புள்ளிகள்)

IV) அ) தொழிற்சாலை பொறி இட அமைவினைத் திட்டமிடல் என்றால் என்ன என்பதை விளக்குக.

ஆ) உற்பத்திப் பிரிவின் தொழிற்சாலை பொறியிட அமைவுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் **04ஐ** குறிப்பிட்டு விளக்குக.

V) அ) சிறந்த சரக்கிருப்பு மட்டம் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ஆ) ஒரு நிறுவனம் சிறந்த இருப்பு மட்டத்தை பேணாமை காரணமாக ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் **நான்கினை** தருக. (02 புள்ளிகள்)

06)

I) அ) திருமதி சுஜாதா அவர்கள் துணிகளைத் துவைக்கும் சலவை இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்யும் எதிர்பார்ப்பில் உள்ளார். உயர்ந்த தரத்துடன் கூடிய அவ்வாறான இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் எவை?

ஆ) சிறிமல், யசோதா என்பவர்களுக்கு சொந்தமான இரு நிறுவனங்களின் உள்ளீடு, வெளியீடு தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சிறிமல் நிறுவனம் | யசோதா நிறுவனம் |
|---|---|---|
| மூலப் பொருட்கள் (அலகுகளில்) | 2000 | 2000 |
| உழைப்பு (மணித்தியாலம்) | 1500 | 1500 |
| இயந்திராதிகள் | 1500 | 1500 |
| வெளியீடு | 15000 | 20000 |

இ) மேலே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இரு நிறுவனங்களினதும் பின்வரும் விடயங்களை கணிக்க

(1) பொருள் உற்பத்தித் திறன்
(2) உழைப்பு உற்பத்தித் திறன்
(3) இயந்திர உற்பத்தித் திறன்
(4) பூரண உற்பத்தித் திறன் (02 புள்ளிகள்)

II) அ) சச்சி, சிவன், சுகத் என்போர் பாதணி உற்பத்தியாளர்களாவர்.

| | |
|---|---|
| சச்சி | எனக்கு விருப்பமான வடிவமைப்பில் பாதணிகளை உற்பத்தி செய்து கூடுதலான அளவில் விற்பனை செய்வதே எனது எண்ணமாகும். |
| சிவன் | எனது வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்பவும் அவர்களின் தனிப்பட்ட அளவிற்கேற்பவும் நான் பாதணிகளை உற்பத்தி செய்கின்றேன். |
| சுகத் | எனது வாடிக்கையாளர்களின் விருப்பம், கொள்வனவு ஆற்றல் என்பவற்றைக் கருத்தில் கொண்டே நான் பாதணிகளை உற்பத்தி செய்கின்றேன். |

மேலே குறிப்பிடப்பட்ட வணிகர்கள் பின்பற்றும் சந்தைப்படுத்தல் எண்ணக்கருவை வெவ்வேறாகத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) தனிநபரொருவர் தொலைக்காட்சிப் பெட்டியொன்றைக் கொள்வனவு செய்யும் போது சந்தைப்படுத்தல் கலவையின் உதவியின் கீழ் கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் எவை? (02 புள்ளிகள்)

III) வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்கு சந்தைப்படுத்தல் கலவையின் முக்கியத்துவத்தை காட்டுவதற்கு **இரு** காரணிகளைத் தருக. (04 புள்ளிகள்)

IV) சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற டிக்கிரி மாரி, கோல்ட் மாரி என்பன சிறுவர்களிடையே பிரபல்யம் பெற்றுள்ள இரு வகை உற்பத்தி நிறுவனங்களின் பிஸ்கட்களாகும். இவ்விரு வகை பிஸ்கட்களையும் இனம் காண்பதில் நுகர்வோர்கள் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர்.

அ) இப்பிஸ்கட் வகை இரண்டினையும் மிகத் தெளிவாக வேறுபடுத்தி இனம் காண்பதற்கு பயன்படுத்துகின்ற தந்திரோபாயம் (உபாயம்) சந்தைப்படுத்தலில் எப்பெயரினால் அழைக்கப்படுகின்றது? (02 புள்ளிகள்)

ஆ) மேலே ‘அ’ வில் தரப்பட்ட விடைக்கேற்ப நுகர்வோருக்கு இதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் எவை? (02 புள்ளிகள்)

V) வ/ப சியல், வ/ப விமல் கம்பனிகள் இரண்டினதும் நிதித் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | முதலீடு செய்த மூலதனம் (ரூபா) | விற்பனை (ரூபா) | வரிக்கு முன்னரான தேறிய இலாபம் (ரூபா) |
|---|---|---|---|
| வ/ப சியல் கம்பனி | 300000 | 600000 | 50000 |
| வ/ப விமல் கம்பனி | 150000 | 300000 | 60000 |

VI) அ) மேலே தரப்பட்ட இரு நிறுவனங்களினதும் தேறிய இலாப வீதத்தைக் கணிக்க. (02 புள்ளிகள்)

ஆ) மேலே தரப்பட்ட தகவல்களுக்கேற்ப இரு கம்பனிகளினதும் மிகச்சிறந்த வணிக நிறுவனம் எது என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

07)

I) அ) பங்குச்சந்தை விலைச் சுட்டெண்களான S & P சிறிலங்கா 20 விலைச் சுட்டெண் மற்றும் அனைத்து பங்கு விலைச்சுட்டெண்ணுடன் ஒப்பிடும் போது மொத்த வருவாய் விலைச் சுட்டெண்ணில் காணப்படுகின்ற வேறுபாடுகளை சுட்டிக்காட்டுக.

ஆ) S&P சிறிலங்கா 20 விலைச்சுட்டெண்ணிற்கு கம்பனிகளை தெரிவு செய்யும்போது அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற நியதிகள் யாவை? (02 புள்ளிகள்)

II) அ) காசு வரவு செலவு அட்டவணை மற்றும் வணிகமொன்றின் காசுப்புத்தகம் என்பவற்றுக்கிடையில் காணப்படுகின்ற வேறுபாடுகளை விளக்குக? (02 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் பணச்சந்தையுடன் இணைந்த துணைச்சந்தைகள் **நான்கு** தருக. (02 புள்ளிகள்)

III) அ) “துன்பங்கள் துயரங்கள் என்பது சம்பளம் கூலி என்பதை விடவும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்” விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) ஊழியர் கொடுப்பனவு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை காட்டுவதற்கு **இரு** விடயங்களினை முன்வைத்து விளக்குக. (02 புள்ளிகள்)

IV) அ) தொழில் சார் வாழ்க்கை முகாமைத்துவம் என்றால் என்ன. (02 புள்ளிகள்)

ஆ) ஊழியர் துன்பங்கள் துயரங்கள் ஏற்படுவதற்கான **நான்கு** காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

V) அ) வணிக அமைப்புக்களில் கூடுதலாக காணப்படுகின்ற ஒழுக்கத்திற்கு முரணான விடயம் எனப்படுகின்ற முறைகேடுகள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

ஆ) நிறுவனமொன்றில் இடம்பெறக்கூடிய ஒழுக்கத்திற்கு முரணான விடயங்களுக்கு எடுக்கக்கூடிய **நான்கு** ஒழுக்காற்று நடவடிக்கைகளைத் தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

08)

I) அ) சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான பலவீனமான முகாமைத்துவம் காரணமாக தொழில் கொள்வோர் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற **நான்கு** பிரதி கூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) கைத்தொழில் பிணக்கு காரணமாக தொழில் கொள்வோருக்கும், நுகர்வோருக்கும் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் **நான்கு** தருக. (02 புள்ளிகள்)

II) அ) தீர்மான உதவி முறைமையொன்றில் உள்ளடங்கியுள்ள கட்டமைக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கட்டமைக்கப்படாத தீர்மானங்கள் என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
(02 புள்ளிகள்)

ஆ) கணினி தொழில்நுட்பத்தினூடாக தகவல்கள், உருவகத்தரவுகள், புள்ளிவிபரீதியான மற்றும் கற்புல செவிப்புல தரவுகள் எனும் வகையில் தரவுகள் சேகரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. அவ்வாறான வாய்மொழி, உருவக, எழுத்து, இலக்க ரீதியான தரவுகள் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களைத் தருக.
(02 புள்ளிகள்)

III)

அ) இணையத்தினூடாக வழங்கப்படுகின்ற சேவைகளுள் பேச்சு வசதிகள் (VOIP) வசதிகளினூடாக கருத்துக்களை பரிமாற்றிக் கொள்கின்ற முறையினூடாக பெறக்கூடிய சேவைகள் **இரண்டு** தருக.
(02 புள்ளிகள்)

ஆ) மாணவர் என்ற ரீதியில் இணையத்தை பரிசீலனை செய்வதினூடாக பெற்றுக்கொள்ளக் கூடிய **நான்கு** அனுகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

IV)

அ) வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கியுள்ள வணிக விபரம் என்பதனால் கருதப்படுவது யாது என்பதை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

ஆ) வணிகத் திட்டமொன்றின் பிரதான பகுதியாகிய நிறைவேற்றுச் சுருக்கத்தில் உள்ளடங்கியுள்ள **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

V) அ) வணிகத்திட்டத்திற்கேற்ப வணிக எண்ணத்தின் உண்மைத் தன்மையினை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தக்கூடிய நிதியல்லாத அளவீட்டுக் கருவிகள் 04 தருக. (04 புள்ளிகள்)